# அக்டோபர் – 28 – பொதுக்கால 30ம் ஞாயிறு

**“உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” (மாற் 10:31)**

## முதல் வாசகம் : ஏரெமியா 31 : 7 - 9

ஆண்டவர் தொடர்ந்து கூறுகிறார் யாக்கோபை முன்னிட்டு மகிழ்ந்து பாடுங்கள் மக்களினத் தலைவனைக் குறித்து ஆர்ப்பரியுங்கள் முழக்கம் செய்யுங்கள், புகழ்பாடுங்கள் “ஆண்டவர் இஸ்ரயேலில் எஞ்சியோராகிய தம்மக்களை மீட்டருளினார்!“ என்று பறைசாற்றுங்கள். இதோ! வடக்கு நாட்டிலிருந்து அவர்களை நான் அழைத்து வருவேன் மண்ணுலகின் கடை எல்லைகளினின்று அவர்களைக் கூட்டிச் சேர்ப்பேன். அவர்களுள் பார்வையற்றோரும் காலூனமுற்றோரும் கருவுற்றோரும் பேறுகாலப் பெண்டிரும் அடங்குவர் பெரும் கூட்டமாய் அவர்கள் இங்குத் திரும்பி வருவர். அழுகையோடு அவர்கள் திரும்பிவருவார்கள் ஆறுதலளித்து அவர்களை நான் அழைத்துவருவேன் நீரோடைகள் ஓரமாக அவர்களை நான் நடத்திச்செல்வேன் இடறிவிழாதவாறு சீரான வழியில் அவர்கள் நடக்கச்செய்வேன். ஏனெனில் நான் இஸ்ரயேலின் தந்தை, எப்ராயிமோ என் தலைப்பிள்ளை.

**பதில்பாடல் :** ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்.

## இரண்டாம் வாசகம் : ஏபிரேயர் 5 : 1 – 6

சகோதர சகோதரிகளே! தலைமைக்குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகிறார்.அவர் தாமே வலுவின்மைக்கு ஆளாயிருப்பதால், அறியாமையில் இருப்போருக்கும் நெறிதவறி நடப்போருக்கும் பரிவு காட்டக் கூடியவராயிருக்கிறார்.அவர் மக்களுடைய பாவத்திற்குக் கழுவாயாகப் பலி செலுத்துவதுபோல, தம் வலுவின்மையின் பொருட்டுத் தமக்காகவும் பலி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார். மேலும், யாரும் இம்மதிப்புக்குரிய பணியைத் தாமே தேர்ந்துகொள்வதில்லை. ஆரோனுக்கு வந்தது போன்று கடவுளிடமிருந்தே அழைப்பு வரவேண்டும்.அவ்வாறே கிறிஸ்துவும் தலைமைக் குருவாகத் தம்மையே உயர்த்திக் கொள்ளவில்லை. ”நீர் என் மைந்தர் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்” என்று அவரிடம் கூறியவரே அந்த மேன்மையை அவருக்கு அளித்தார்.இவ்வாறே மற்றோரிடத்தில், ”மெல்கிசதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே” என்றும் கூறப்பட்டுள்ளது.

## நற்செய்தி : மாற்கு 10 : 46 - 52

அக்காலத்தில் இயேசுவும் அவருடைய சீடரும் எரிக்கோவுக்கு வந்தனர். அவர்களும் திரளான மக்கள் கூட்டமும் எரிகோவைவிட்டு வெளியே சென்றபோது, திமேயுவின் மகன் பர்த்திமேயு வழியோரம் அமர்ந்திருந்தார். பார்வையற்ற அவர் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். நாசரேத்து இயேசுதாம் போகிறார் என்று அவர் கேள்விப்பட்டு, ”இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கத்தத் தொடங்கினார்.பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர் ஆனால் அவர், ”தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று இன்னும் உரக்கக் கத்தினார்.இயேசு நின்று, ”அவரைக் கூப்பிடுங்கள்” என்றுகூறினார். அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு, ”துணிவுடன் எழுந்துவாரும், இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்” என்றார்கள்.அவரும் தம் மேலுடையை எறிந்து விட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார்.இயேசு அவரைப் பார்த்து, ”உமக்கு நான் என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்?” என்றுகேட்டார். பார்வையற்றவர் அவரிடம், ”ரபூணி, நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்” என்றார்.இயேசு அவரிடம், ”நீர் போகலாம் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று” என்றார். உடனே அவர் மீண்டும் பார்வைபெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.

**தியானம் :** யேசு ஏழைகளின் தோழனாக நல்ல வைத்தியராக, ஏழை எழிய மக்களை அன்பு செய்பவராக சமுதாயத்தில் நலிந்த மக்களால் பார்க்கப் பட்டார். எதிரியாக, விரோதியாக, சட்டங்களை அவமதிக்கின்றவராக சமுதாயத் தலைவர்களால் பார்க்கப்பட்டார். ஒரே மக்களின் சமூகம் இரு வேறு கோணங்களில் ஒரே மனிதரான யேசுவை பார்க்கின்றது. இங்கே பார்வையில்தான் பிழை. பார்வை என்பது நமக்கு மிக முக்கியமானது. அகப்பார்வை, புறப்பார்வை என பார்வை இருவகைப்படும். எமது கண்களால் நாம் பார்ப்பது புறப் பார்வை. உள்ளார்ந்த விதமாக பார்ப்பது அகப் பார்வை. நற்செய்தியில் வெளிப்பார்வையை இழந்த ஒருவரின் குரல் அவரை சுற்றி இருந்த மக்களால் நசுக்கப்பட்டது. ஆனால் யேசுவின் காதுகளில் கேட்ட அந்தக்குரல் அழைக்கப் பட்டது. கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் சலசலப்பின் மத்தியிலும் யேசுவின் காதுகளுக்கு “தாவீதின் மகனே எனக்கு இரங்கும்’’ என்ற குரல் விழுகின்றது. அந்தக் குரலில் யேசு நம்பிக்கையைக் கண்டார். அதுதான் அகப் பார்வை. அந்த நம்பிக்கை பார்வை அற்ற மனிதருக்கு வாழ்வளித்தது. இன்று நாமும் எமது தேவைகளில் பலரை கூவி அழைக்கின்றோம். அது அவர்களின் காதுகளிற்கு எட்டாமல் போகலாம். ஆனால் நாம் யேசுவை நோக்கி கூவி அழைக்கும்போது நிற்சயமாக எமது குரல் அவரின் காதுகளுக்கு எட்டும். இன்று எமது வாழ்வில் கண்ணீர் இருக்கலாம், வேதனை இருக்கலாம், துன்பம் இருக்கலாம், நோயினால் பாதிக்கப் பட்டிருக்கலாம், பிள்ளைகளைப் பற்றிய கவலை இருக்கலாம், எதிர்காலம் பற்றிய கவலை இருக்கலாம். கடன் தொல்லையால் கஸ்டப்படலாம். அவற்றை எல்லாம் யேசுவிடம் ஒப்படைப்போம். அவர் நமக்கு விடுதலை தருவார். யேசு கலிலேயாக் கடலில் யோவானினால் திருமுழுக்கு பெற்றபோது எவ்வாறு தண்ணீர் தன்னைக் கழுவிக்கொண்டதோ அவ்வாறு நாமும் யேசு என்னும் கடலில் எம்மைக் கழுவும்போது எமது வாழ்வில் உள்ள அழுக்குகள் எல்லாம் கழுவப்பட்டு நாம் தூய்மை பெறுவோம். முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் அவர் நம்மை நீரோடை அருகே அழைத்து செல்வார். நமது வாழ்வும் செழிப்படையும்.